# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு உயிசச | மலர் |
|---|---|---|
| சசு | பரிதாபி, மாசி<br>( 1973 — பிப்ரவரி — மார்ச்சு ) | யக |


## பழமொழிச் செல்வம்


பேராசிரியர் வ. பெருமாள், எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எசு.,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி.
உரிகம், கோலார் தங்க வயல்.


தமிழ் மொழி பழமொழிச் செல்வம் நிறைந்த செம்மொழி. ஒவ்வொரு பழமொழியும் ஆழ்ந்தகன்ற நுண்ணிய கருத்தைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது. தமிழ்ப் பழமொழிகளில் சிலவற்றை நுண்மாண் நுழை புலத்துடன் ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

### லிங்கனும் ரங்கனும்

மனிதனுக்கு எத்தனையோ திறமைகள் உண்டு; எத்தனையோ தந்திரங்கள் தெரியும். மனிதன் அவற்றை வேண்டிய பொழுதெல்லாம் நன்கு பயன்படுத்தி மிகச் சமர்த்தனாக விளங்குவதை நாம் அன்றாடம் கண்டு வருகிறோம்.

மனிதன் காலத்திற்கும், இடத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்பப் பேசியும் நடந்துகொண்டும் வருகிறான். கோடைக் காலத்தில் பருத்தி ஆடையையும் குளிர் காலத்தில் கம்பளி ஆடையையும் அணிகின்றான். வேனிற் காலத்தில் ஆடைகளைக் குறைவாகவும் கூதிர் காலத்தில் ஆடைகளை மிகுதியாகவும் அணிகின்றான். கோடையில் குளிர் பானம் பழரசம் முதலிய குளிர் உணவுப் பொருள்களையும், குளிர் காலத்தில் காப்பி, தேநீர் போன்ற வெம்மை உணவுப் பொருள்களையும் மக்கள் மிகுதியாக உட்கொள்வது கண்கூடு இவ்வாறு மனிதன் காலத்திற்கு—பருவத்திற்கு—வெப்ப தட்ப நிலைக்கு ஏற்றவாறு நடந்து கொள்கின்

ருன். அதைப் போலவே இடத்திற்கும்—ஊர்க்கும் நாட்டுக்கும் ஏற்றவாறு — ஒழுகுகின்ருன். ஊர்க்கு ஏற்றவாறு ஒழுகுவதே முறையாகும்.

ஊர் ஓட ஒக்க ஓடு.
நாடு ஓட நடுவே ஓடு.
ஊருடன் கூடி வாழ்.
நாடு ஒப்பன செய்
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
பத்துப்பேரோடு பதினேராம் பேராய் இரு.

முதலிய நம் நாட்டுப் பழமொழிகளும் பொருள் மொழிகளும். உரோமாபுரியில் இருக்கும் போது உரோமரைப் போல் வாழ் (Be a Roman in Rome) என்னும் மேல் நாட்டுப் பழமொழியும் மனிதன் தான் வாழ்கின்ற இடத்துக்கு ஏற்ப ஒழுகுதல் வேண்டும் என்னும் நீதியைத் தெளிவாக அறிவுறுத்துகின்றன

காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு மனிதன் நடந்து கொள்வதைப் போல, மக்களுடன் பழகும்போது அவரவர் தகுதி, உள்ளம், இயல்பு ஆகியவற்றிற்கு ஏற்றவாறும் ஒழுகுதல் வேண்டும் இதுவே உலகத்தாருடன் பழக வேண்டிய இயல்பாகும். இதையே 'உலக நடைமுறை' என்றும் குறிப்பிடலாம். இம்முறையைத் தனனலத்திற்காகப் பயன்படுத்துபவரும் உண்டு. இதையே அறநெறியில் பயன்படுத்தி வாழ்பவரும் உண்டு. இம்முறையைத் தன்னலத்திற்காகக் கையாளுபவர்கள் 'கண்டால் ஒரு பேச்சு காணுவிட்டால் ஒரு பேச்சு' பேசுபவர்களாகவும் 'ஆளுக்குத் தகுந்த பேச்சு ஐயாவுக்குத் தகுந்த குல்லா' என்னும் பழமொழிக்கு ஏற்ப நடப்பவர்களாகவும் இருப்பதைக் காண்கிருேம் இம்முறை அறநெறிக்கு மாறுபட்டதாகும் பிறருடன் நல்லவற்றைப் பேசும் போது அவர்கள் மனம் மகிழுமாறு அவரவர் மன நிலைக்கேற்ப உரையாடுதல் ஒரு தனிக் கலையாகும். நம் இல்லத்திற்கு வருகின்ற விருந்தினரை அவரவர் சுவைக்கு ஏற்ப நாம் விருந்து உபசரிப்பதைப்போல, உரையாடும் போது அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப அவர் விரும்பும் முறையில் அவர் விரும்பும் மொழியில் நாம் உரையாடுதல் வேண்டும். இதுவே சமுதாய ஒழுக்கமாகும்.

ஒரு கதைக்குரிய கதாநாயகன் இறந்துவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். அக்கதையைச் சைவனிடம் கூறும்போது கதாநாயகன் சிவலோகபதவி அடைந்துவிட்டான் என்று கூற

வேண்டும். அதே செய்தியை வைணவனிடம் சொல்லும்போது கதாநாயகன் வைகுண்டபதவி அடைந்து விட்டான் என்று சொல்ல வேண்டும். கிறித்துவனிடம் இச்செய்தியை உரைக்கும்போது கதாநாயகன் கர்த்தருள் நித்திரை அடைந்தான் என்று சொல்ல வேண்டும். பௌத்தனிடம் இதைக் கூறும்போது கதாநாயகன் பஞ்சசக்கந்தம் அடைந்தான் என்று சொல்ல வேண்டும். பகுத்தறிவுவாதியிடம் இதை உணர்த்தும்போது கதாநாயகன் இயற்கை எய்தினன் என்று உணர்த்தல் வேண்டும்.

சொல்லப்படுகின்ற செய்தி ஒன்றாகயிருந்தாலும், கேட்போர் மன இயல்புக்கு ஏற்பப் பொருத்தமாகச் சொல்வதே முறை. இம்முறையினால் கேட்போர்க்கு மனமகிழ்ச்சி ஏற்படுகின்றது. கேட்போர் மனமகிழ்ச்சியை உணரும்போது சொல்வோர்க்கும் மனமகிழ்ச்சி ஏற்படுகின்றது

இந்து சமயத்தில் பல உட்பிரிவுகள் இருந்தாலும், சைவம் வைணவம் என்னும் இரு பிரிவுக்குள் எல்லாவற்றையும் அடக்கி விடலாம். இந்து சமய மக்களுக்குச் சூட்டப்பட்டுள்ள சிறப்புப் பெயர்கள் பெரும்பாலும் இறைவன் பெயர்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை இறைவன் பெயரையும் இறைவியின் பெயரையும் ஒருபோதும் மறக்கலாகாது என்பதற்காகப் பெற்றோர் தம் குழந்தைகளுக்கு இறைவன் பெயரைச் சூட்டுகின்ற மரபை நாம் இன்றும் கண்டு வருகின்றோம். முருகன், சுப்பிரமணியன், பாலசுப்பிரமணியன், குமரன், சிவகுமார், கணபதி, கணேசன், கண்ணன், கிருட்டிணன் பாலகிருட்டிணன், இராமகிருட்டிணன், இராமசாமி, கிருட்டிணசாமி, சுவாமிநாதன், பரமானந்தன், பலராமன், அனந்தராமன் முதலிய ஆண்பாற் சிறப்புப் பெயர்களும் பார்வதி, உமாதேவி, தேவி, சரசுவதி, வள்ளி, சீதை, மீனாட்சி, காமாட்சி, இலட்சுமி, சீதாலட்சுமி முதலிய பெண்பாற் சிறப்புப் பெயர்களும் இவண் நோக்கத் தக்கன. இவற்றுள் சில சைவப் பெயர்கள்; சில வைணவப் பெயர்கள்.

இறைவன் பெயரைச் சூட்டுகின்ற மரபு பற்றிப் பெற்றோர் தம் ஆண் குழந்தைக்கு ஒரு தெய்வப் பெயரைச் சூட்டினார்கள். அக்குழந்தை வளர்ந்து காளைப் பருவம் எய்தினன்.

சிவனடியானுக்கு ஆண்டி என்று பெயர். ஆண்டி சிவனடியானைக் குறிப்பதுடன் சிவனையும் குறிக்கும். பழநி ஆண்டி என்னும் பெயரை இங்குச் சிந்திக்கலாம். தாதன் என்பது

வைணவத் தொண்டனைக் குறிக்கும். சிவனடியானாகிய ஆண்டி கேட்டபோது அவன் மனம் மகிழுமாறு தன் பெயரை லிங்கன் என்று சொன்னான். லிங்கன் என்னும் சைவப் பெயரைக் கேட்ட உடன் ஆண்டி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. லிங்கம் என்பது சிவலிங்கத்தையும் லிங்கன் என்பது சிவநெறியில் ஒழுகுகின்ற சைவனையும் குறிக்கும் ஆண்டி அப்பால் சென்ற வுடன் வைணவ பக்தனான தாதன் வந்து பெயரைக் கேட்டான். அப்போது அவன் தாதனை மகிழ்விப்பதற்குத் தன் பெயர் ரங்கன் என்று சொன்னான். ரங்கன் என்னும் திருமால் பெயரைக் கேட்டவுடன் தாதன் உள்ளம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி எங்கும் சுற்றி ரங்கனைப் பாரு (சேவி) என்னும் பழமொழியை எண்ணியது.

ஆண்டி கேட்டபோது லிங்கன் என்னும் சைவப் பெயரையும், தாதன் கேட்டபோது ரங்கன் என்னும் வைணவப் பெயரையும சொன்ன நிகழ்ச்சி தமிழில் பழமொழியாகிவிட்டது. இதோ அப்பழமொழி :—

'ஆண்டியைக் கண்டால் லிங்கன்,
தாதனைக் கண்டால் ரங்கன்.'

## நாலு பேர் :—

'நாலு பேர் போன வழியில் நாம் போக வேண்டும். என்பது தமிழ்ப் பழமொழி எந்த நாலு பேர் என்று இவண் சிந்தித்தல் வேண்டும். பொதுவாகச் சமயக் கண்கொண்டும் குறிப்பாகச் சைவ சமயக் கண்கொண்டும் ஆராய்ந்தால் சைவ சமய குரவராகிய திருநாவுக்கரசர், அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரையும் குறிக்கும். இந்நால்வரும் சைவ சமயத்தின் தலையாய சான்றோர் என்பது அனைவரும் அறிந்த உண்மை இந்நால்வரும் நான்கு நெறியில் சென்றார்கள். அவர்கள் கடைப்பிடித்த நெறி வெவ்வேறாக இருந்தாலும் அவை யாவும் நல்ல ஆன்மிக நெறிகளே.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் உயர்ந்த கொள்கையைக் கடைப் பிடித்து ஒழுகிய அப்பர் இறைவனை ஆண்டையாகவும் தம்மை அடிமையாகவும் எண்ணி ஒழுகினார். அவர் கடைப்பிடித்த நெறி 'அடிமை நெறி'. இதனை வடமொழியில் 'தாச மார்க்கம்' என்று கூறுவர், இறைவியின் ஞானப் பாலை உண்ட திருஞானசம்பந்தர் இறைவனை (சிவபெருமானைத்)

தந்தையாகவும் தம்மை மைந்தனாகவும் கொண்டு ஆளுடைய பிள்ளையாராக ஒழுகினர் அவர் கடைப் பிடித்த நெறி 'தந்தை மகன்மை' நெறி. இந்நெறியை வடமொழியில் 'சத்புத்திர மார்க்கம்' என்று கூறுவர். சிவனுடன் வாதாடி 'வன்தொண்டர்' என்னும் பெயர் பெற்ற சுந்தரர் இறைவனைத் தம் தோழனாக மதித்து ஒழுகினர். 'ஏழிசையாய் இசைப் பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்' என்று சுந்தரர் பாடிய பாடல் இங்குச் சிந்திக்கத்தக்கது. சுந்தரர் கடைப் பிடித்த நெறி 'தோழமை நெறி.' இது வடமொழியில் 'சகமார்க்கம்' என்று சொல்லப்படும். திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் இறைவனை ஞானாசிரியனாகவும் தம்மை மாணாக்கனாகவும் கொண்டு ஒழுகினர். சிவபெருமான் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் மாணிக்கவாசகர்க்கு அறிவுரை கூறியது இவண் நோக்கத்தக்கது. மாணிக்கவாசகர் பின்பற்றியது 'அறிவுநெறி.' இதற்குச் சன்மார்க்கம் ('ஞான மார்க்கம்') என்னும் வட மொழிப் பெயரும் உண்டு.

நாலு பேர் போன வழியில் நாம் போகவேண்டும் என்னும் பழமொழிக்குச் சைவ சமய குரவர் நால்வர் (அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர்) கடைப் பிடித்த நெறியை நாமும் கடைப்பிடிக்கவேண்டும் என்று சைவ சித்தாந்த அடிப்படையில் பொருள் கொள்வதும் உண்டு.

மூவர் தேவாரமும் மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகமும் இறைவன் வாக்காகவே கருதப்படுவதுண்டு. 'நால்வர் வாக்கு வேதவாக்கு', 'நால்வர் வாக்கு தேவ வாக்கு' என்பவை பழமொழிகள்.

'நாலு பேர் என்ன சொல்லுவார்கள்?' என்பது தமிழிலுள்ள வினாப் பழமொழி 'நாலு பேர் என்ன சொன்னார்கள்?' என்று இறந்த காலத்தில் வினாப் பழமொழி அமைந்திருந்தால் சைவ சமய குரவர் நாலு பேர் சொன்ன கருந்துக்களைத் திரட்டி வினாவிற்கு விடையளித்து விடலாம் ஆனால் அவ்வாறு இறந்த காலத்தைக் குறிப்பிடுகின்ற வகையில் பழமொழி அமையவில்லை 'நாலு பேர் என்ன சொல்லுவார்கள்?' என்று எதிர்காலத்தைச் சுட்டும் வகையில் பழமொழி அமைந்துள்ளது. எனவே, இப் பழமொழியிலுள்ள நாலுபேர் என்னும் தொடர் சைவசமய குரவர் நால்வரைக் குறிக்காது என்பது தெளிவு. அப்படியானால் நாலுபேர் யார்?

மனிதன் பிறக்கிருன்; இருக்கிருன்; சாகிருன். இது சாதாரண மனிதனின் சுருக்கமான வரலாறு. சான்ருேன் தோன்றுகின்ருன்; வாழ்கின்ருன்; அமரனுகின்ருன். இது சான்ருேனின் வரலாறு. எவன் இறந்தாலும் அவன் உடலைப் பாடையில் இட்டு நாலுபேர் தூக்கிக்கொண்டு மயானத்திற்குச் செல்வர். பாடையில் பிணத்தைச் சுமந்துகொண்டு சுடுகாட்டுக்கோ, இடுகாட்டுக்கோ செல்கின்ற நாலுபேர் என்ன சொல்லுவார்கள்? இறந்தவன் நல்லவனுக வாழ்ந்திருந்தால் அவன் புகழைச் சொல்லிக்கொண்டே நாலு பேரும் சுமந்து கொண்டு போவார்கள். இறந்தவன் தீயவனுகவும் கொடியவனுகவும் இருந்திருந்தால் அவன் புகழைப் பாடமுடியுமா? நாம் இறந்த பிறகு நம்மைத் தூக்கிச் செல்லுகின்ற நாலுபேர் நம்மைப்பற்றி என்ன சொல்லுவார்கள்? நம்மைப் பற்றி நாலு நல்ல சொற்கள் சொல்லுமாறு நடந்து கொள்ள வேண்டாமா? நம்மைப் பற்றி நாலு பேர் நல்ல சொற்களைச் சொன்னுல்தானே நமக்குப் பெருமையும் புகழும் கிட்டும்? நாம் இறுதி யாத்திரை செல்லும்போது நம்மை நாலு பேர் தூற்றுமாறு நடந்துகொள்வது நல்லதா? இவை எல்லாவற்றையும் நாம் உயிருள்ளபோதே நினைவூட்டி நம்மை நன்னெறியில் உய்க்கின்றது 'நாலு பேர் என்ன சொல்லுவார்கள்?' என்னும் பழமொழி.

## இடமும் மடமும்

கடலின் மேல் பரப்பிலிருந்து பார்த்தால் கடல் ஆழம் தெரியாது. கடலடியில் கிடக்கும் முத்து கண்ணுக்குப் புலனுகாது. மூச்சை அடக்கிக் கொண்டு உள்ளே ஆழமாகச் சென்ருல் தான் கடல் ஆழத்தைக் கண்டு முத்தை எடுக்க முடியும். இது அனைவரும் அறிந்த உண்மை. ஆழ்கடல் அடியில் முத்து கிடப்பதைப் போல், தமிழ்ப் பழமொழிக் கடலில் நுண்ணிய சமய உண்மைகள், மெய்ப் பொருள் நுட்பங்கள் ஆன்மிகக் கருத்துக்கள் யாவும் மறைந்து கிடக்கின்றன. இலை மறை காய் போல் விளங்கும் இப்பேருண்மைகள் நுண்மாண் நுழைபுலத்துடன் கூர்ந்து ஆராய்ந்தால்தான் புலனுகும். இல்லாவிட்டால் பழமொழியின் பருப்பொருளும் பொதுப் பொருளும் புரியுமே தவிர நுண்பொருள் விளங்காது.

'இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு, இப்பழமொழி கற்ருேர்க்கும் மற்ருேர்க்கும் நன்கு தெரியும். ஒருவனுக்குக் கொஞ்சம் இடம் கொடுத்

தால் போதும். அவன் எல்லாவற்றையும் பறித்துக் கொள்வான் என்று இப்பழமொழிக்குப் பொருள் கொள்ளப்படுகின்றது. இதுவே பொதுமக்கள் அறிந்த பொதுப் பொருள்.

> இருக்க இடம் கொடுத்தால் படுக்கப் பாய் கேட்பான்
> ஓண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டியது.
> சந்து கொடுத்தால் வந்து விடுவான்

முதலிய பழமொழிகளை இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான் என்னும் பழமொழிக்கு ஒத்த பழமொழிகளாகச் சொல்லுவதும் உண்டு இதே கருத்துள்ள பழமொழி ஆங்கிலத்திலும் உண்டு; ( Give him an inch, he will take an ell. )

இப்பழமொழிக்கு இப்பொதுப் பொருள் மட்டும்தான் உண்டு என்று நினைத்துவிடக் கூடாது, இப்பழமொழியிலுள்ள ஒவ்வொரு சொல்லையும் நுணுக்கமாக ஆராய்ந்தால் இதில் ஆன்மிகக் கருத்து புதைந்திருப்பதைக் காணலாம்.

நானே பெரியவன், நானே உயர்ந்தவன், நானே அறிவாளி, நானே தலைவன், நானே வல்லவன் என்று எண்ணிக் கொண்டும் சொல்லிக் கொண்டும் தலைக் கொழுப்புடன் திரிந்து பேயாட்டம் ஆடுகின்றான் மனிதன். 'நான்' என்னும் தன் முனைப்பு (Egotism) உணர்ச்சிக்கு அகப்பற்று என்று பெயர். மனிதன் அகப்பற்றுடன் மட்டும் நிற்கவில்லை. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய மூவகை ஆசையினாலும் உந்தப்பட்டுப் புறப்பற்றுடன் அலைகின்றான். என் வீடு, என் தோட்டம், என் பணம், என் சொத்து என்று எண்ணிக் கொண்டும் சொல்லிக்கொண்டும் ஆசையுடன் திரிவதை நாம் கேட்கின்றோம். 'ஆசை வெட்கம் அறியாது', 'ஆசைக்கோர் அளவில்லை!' 'பேராசை பெருநஷ்டம்' ஆகியவை நாடறிந்த தமிழ்ப் பழமொழிகள்,

மனிதன் 'நான்' என்னும் அகப்பற்றுடனும் 'எனது' என்னும் புறப்பற்றுடனும் ஆடுகின்றான். 'நான்' என்பது அகச் செருக்கு 'எனது' என்பது புறச் செருக்கு.

> 'யான் எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும்'

என்பது திருக்குறள்,

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே,

என்பது மாணிக்கவாசகர் திருவாசகம். இருவகைப் பற்றாலும் மூவகை ஆசையாலும் ஆட்கொள்ளப்பட்ட மனிதன் ஆணவம், கன்மம், மாயை முதலிய மும்மலத்தில் அழுந்தி நில்லாதவற்றை நிலையானவை என்று தன் சிற்றறிவால் தடுமாறுகின்றான். அவன் உள்ளத்தில் பற்றும் ஆசையும் உண்டு அவ்வளவு தான். பரம்பொருளைப் பற்றிய எண்ணமோ, உணர்ச்சியோ கிடையாது அவனிடம் சிற்றறிவும் மயக்கமும் உண்டே தவிர, இறையறிவோ அறிவுத் தெளிவோ கிடையாது அவனுடைய அறியாமையைப் போக்க வழி எது? வழியைத் தெளிவுபடுத்து கின்றது பழமொழி. 'இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்.' மனிதன் தன் உள்ளத்தில் இறைவனுக்கு இடம் கொடுத்தால் இறைவன் மனிதனிடத்தில் உள்ள அறியாமையை அடியோடு பிடுங்கி எறிந்து விடுவான். 'மடம்' என்னும் சொல் அறியா மையையும் குறிக்கும் இறைவன் ஒருவனால்தான் மடந்தை (அறியாமையை) வேரோடு களைந்தெறிய முடியும் சுருங்கக் கூறுமிடத்து மனிதன் தன் உள்ளத்தில் கடவுளுக்கு இடம் கொடுத்தால், கடவுள் மனிதன் அறியாமையை அடியோடு நீக்கி விடுவான். இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்' என்னும் பழமொழிக்கு இதுவே நுண்ணிய ஆன்மிகப் பொருள் ஆகும்.

## பேரும் பேறும்:

திருமண நாள் மனித வாழ்வில் ஒரு பொன்னாள். மண மக்கள் சிந்தையில் என்றும் பசுமையாக நிலைத்திருக்கும் நன்னாள். தனித் தனியே வாழ்ந்த நங்கையும் நம்பியும் ஒருவ ராக இணையும் திருநாளே மணநாள்

திருமணத்தின்போது புது மணமக்களை அறிவிலும் ஆண் டிலும் நிறைந்த பெரியோர்கள் வாழ்த்துவது தொன்றுதொட்டு இன்றுவரை நம் நாட்டில் நிலவி வரும் மரபாகும் மணமக்கள் பெரியவர்கள் காலில் விழுந்து வணங்குவதையும் பெரியவர்கள் மணமக்களை அகங்குளிர வாழ்த்துவதையும் நாம் இன்றும் திருமண விழாக்களில் காணலாம். பெரியோர் பலரின் நல்

வாழ்த்துடன் நல்லறமாகிய இல்லறம் தொடங்குதல் நல்லது என்னும் நம்பிக்கை அனைவர்க்கும் உண்டு. இத்தகைய நம்பிக்கை உலகம் முழுவதும் காணப்படுகின்றது. திருமணம் (இல்லறம்) ஆயிரங் காலத்துப் பயிர் என்னும் நம் கருத்தும், திருமணம் இறைவனால் இறை உலகில் உறுதி செய்யப்படுகின்றது (Marriages are made in heaven) என்னும் மேல் நாட்டார் கருத்தும் இங்கு ஒப்பு நோக்கிச் சிந்திக்கத் தக்கன.

எனவே, கல்யாணம் அல்லது கண்ணாலம் என்று பேச்சு வழக்கில் குறிக்கப்படுகின்ற மணம் வெறும் மணமன்று. அது திருமணம், அதாவது தெய்விகத் தன்மை வாய்ந்த புனித மணமாகும்.

மக்களைப் பெற்றவர்களும் சுமங்கலியராகவுமுள்ள தாயர் நால்வர் கூடி மணமகளை நீ கற்பிலிருந்து வழுவாமல், பல பேறுகளைப் பெற்று உன் கணவனால் விரும்பப்படும் அன்புள்ளவளாக ஆகுக! என்று வாழ்த்திய செய்தியைக் கீழ்க்காணும் அகநானூற்று அடிகளிலிருந்து அறியலாம்.

புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வாழாஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென்.
— அகநானூறு : 86 : நல்லாவூர் கிழார்.

பெரியோர்கள் மணமக்களை வாழ்த்தும்போது 'வாழ்க' என்று மட்டும் வாழ்த்தாமல் 'பதினாறும் பெற்று வாழ்க' என்று வாழ்த்துவது மரபு. ஆண் பிள்ளைகளை வாழ்த்துவதற்கு வாழையடி வாழையாக நாட்டுப்புற மக்கள் ஒரு பாட்டைக் கையாளுவார்கள். ஆண் குழந்தையின் அருமை பெருமை எல்லாவற்றையும் குறிப்பிட்டு இறுதியில் அகங்குளிர வாழ்த்துவது மரபு, இதோ அப்பாடல்.

வாழ்வாய் வளர்ந்திடுவாய் வையகம் பெற்றிடுவாய்
நிற்பாய் நிலைதரிப்பாய் நீளரசை யாண்டிடுவாய்
கற்பதித்த தூண்போலக் கலங்காது அரசாள்வாய்
விற்பதித்த தூண்போல வெகுநாள் அரசாள்வாய்
போருக்குப் போய்விடுவாய் பொழுதோடே
வென்றிடுவாய்
பகைத்தார்கள் பூமுடியைப் பருந்தாட்டம் ஆட்டிடுவாய்

சினத்தார்கள் பூமுடியைச் செண்டாட்டம் ஆட்டிடுவாய்
வென்ற களரியிலே வீரபட்டங் கொண்டிடுவாய்
பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்திடுவாய்.

பதினாறு என்னும் சொல்லைப் பொறுத்தவரை கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் 'எந்தப் பதினாறு' என்பதில்தான் மக்களிடையே. குறிப்பாகப் பாமர மக்களிடையே, கருத்து வேறுபாடு நிலவி வருகின்றது. பதினாறும் பெற்று வாழ்க என்னும் பழமொழிக்குப் பதினாறு பிள்ளைகள் (குழந்தைகள்) பெற்று வாழவேண்டும் என்று குருட்டுத்தனமாகப் பொருள் கொள்கின்ற பாமர மக்கள் இன்றும் நம் நாட்டில் மிகப் பலர் உண்டு பதினாறு பிள்ளைகளைப் பெறலாமா என்பது ஒரு சாதாரண வினாவன்று இது ஒரு மிகப் பெரிய பொருளாதாரக் கேள்வியாகும் ஒரு குடும்பத்தினர் பதினாறு பிள்ளைகளைப் பெறுவது வீட்டுக்கும் நல்லதன்று, நாட்டுக்கும் நல்லதன்று. ஒருத்தி பதினாறு பிள்ளைகளைப் பெற்று அடுக்கிக் கொண்டே சென்றால் அவள் உடல் நலம் என்னவாகும் என்பதைக் கடமை உணர்ச்சியும் பொறுப்பு உணர்ச்சியும் உள்ள ஒவ்வொரு குடிமகனும் ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். ஒரு குடும்பத்தில் எத்தனை குழந்தைகள் இருத்தல் வேண்டும் என் பதை நம் முன்னோர்கள் பொருளாதார அடிப்படையில் கணக்கிட்டு அறுதியிட்டு உறுதியாக வரையறுத்து உரைத்திருக் கிறார்கள். 'ஆசைக்கு ஒரு பெண்ணும் ஆஸ்திக்கு ஓர் ஆணும்', 'அடுக்களைக்கு ஒரு பெண்ணும் அம்பலத்துக்கு ஓர் ஆணும்' என்று குடும்ப நலத் திட்டத்தை வகுத்துள்ளனர். அவர்கள் தெளிவுரை பழமொழிகளாகிவிட்டன.

ஒரே சமுதாயத்தில் தோன்றிய பழமொழிகள் ஒன்றுக் கொன்று சற்று வேறுபாடுள்ளதாக இருந்தாலும் இருக்குமே தவிர முரண்பாடு உள்ளதாக இருக்காது. பதினாறு குழந்தைகளைப் பெறவேண்டும் என்று ஒரு பழமொழியும் இரண்டு குழந்தைகளே போதும் என்னும் பொருள் பட மற்றொரு பழமொழியும் ஒன்றுக்கொன்று முரணாக ஒரே மொழியில் தோன்றியிருத்தல் முடியாது ஒரு குடும்பத்தில் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இருப்பதே சாலச் சிறந்தது என்பதைத் தமிழ்ப் பழமொழிகள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல தெளிவுபடுத்து கின்றன அதுவே சிறந்த பால் விகிதமாகும் (Sex Ratio) அவ்வாறு இருக்கப் பதினாறு பிள்ளைகளைப் பெற வேண்டும் என்று எண்ணுவதும் பொருள் கொள்வதும் பெருந் தவறாகும்.

மீண்டும் வாழ்த்துப் பழமொழியைப் பார்ப்போம். 'பதினாறும் பெற்று வாழ்க'. இப்பழமொழியில் பதினாறும் பெற்று என்றுதான் இருக்கின்றதே தவிரப் பதினாறு பிள்ளைகளைப் பெற்று என்று இல்லை. பதினாறு எதைக் குறிக்கின்றது என்பதே சிக்கலான கேள்வி. பதினாறு என்பது பதினாறு வகையான பேற்றைக் குறிக்கின்றது. பேறு என்பது பெறு என்னும் அடிச் சொல்லிலிருந்து வந்தது பேறு என்பது முதல்நிலை நீண்ட தொழிற்பெயர். பெறவேண்டியதும் பெறத்தக்கதும் பேறு எனப் படும். விடு—வீடு, படு—பாடு முதலிய சொற்கள் இவண் ஒப்பு நோக்கத் தக்கன, விடும்போது வீடு : படும்போது பாடு.

மனிதன் அனைத்துத்துறைகளிலும் மிகச் சிறப்பாக வாழப் பதினாறு பேறுகளைப் பெறவேண்டும் என்று நம் முன்னோர் கருதினார்களே தவிரப் பதினாறு பேர்களைப் பெறவேண்டும் என்று கருதவோ சொல்லவோ இல்லை. அந்தப் பதினாறும் பதினாறு பேறு எனப்படும். அவையாவன புகழ் கல்வி, வீரம், வெற்றி. நன்மக்கள், துணிவு. செல்வம், தானியம், சுகம், நுகர்ச்சி (போகம்), அறிவு அழகு, பெருமை. நற்குடி, உடல் நலம், நீண்ட வாழ்நாள் ஆகிய பதினாறுமாம். இப்பதினாறு பேற்றையும் காளமேகப் புலவர் நன்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

துதி. வாணி, வீரம், விசயம், சந்தானம், துணிவு, தனம்,
அதிதானியம், சௌபாக்கியம், போகம், அறிவு, அழகு,
புதிதாம் பெருமை, அறம் குலம், நோயின்மை, பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே.

பதினாறு பேறுகளில் மக்கட்பேறும் (சந்தானம்) ஒன்றே தவிர மக்கட்பேறு ஒன்று மட்டுமே பதினாறு பேறுகள் ஆகிவிடா என்பதை நன்கு அறிதல் வேண்டும். சுருங்கக் கூறுமிடத்து மனிதன் பதினாறு பேறுகளைப் பெறவேண்டும் ; பதினாறு பேர் களைப் பெறக் கூடாது.

## குதிரும் குதிரையும் :-

தமிழகத்தில் ஆறுகள் மிகுதி பேராறும், சிற்றாறும், கிளை யாறும், துணையாறும். வாய்க்காலும். ஓடையும் பாய்ந்து தமிழ கத்தை வளம்படுத்திய வண்ணம் உள்ளன.

காவிரி தென்பெண்ணை பாலாறு — தமிழ்க்
கண்டதோர் வையை பொருனைநதி — என

மேவிய யாறு பலவோடத் — திரு
மேனி செழித்த தமிழ்நாடு — பாரதியார்.

என்று பாரதியார் தமிழக ஆற்றுவளத்தைச் செவியும் மனமும் குளிரப் பாடியுள்ளார்.

நீறு இல்லா நெற்றி பாழ்
நெய்யில்லா உண்டி பாழ்.
ஆள் இல்லா மங்கைக்கு அழகு பாழ்
ஆறு இல்லா ஊர்க்கு அழகு பாழ்.

முதலிய முதுமொழிகள் இவண் நோக்கத்தக்கன.

நெல்லும் கரும்பும் நிலத்திற்கு அழகு.
தாமரை குளத்திற்கு அழகு.
குழந்தை வீட்டுக்கு அழகு.
ஆறு ஊர்க்கு அழகு.

தமிழகத்தில் உள்ள பல ஊர்கள் ஆற்றின் அடிப்படையில் பெயர் பெற்றுள்ளன. தஞ்சை மாவட்டத்தில் — தஞ்சைக்கு வடக்கே ஏழு கல் தொலைவிலுள்ள ஓர் ஊருக்கு அருகில் வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு குடமுருட்டி, காவிரி என்னும் ஐந்து ஆறுகள் பாய்வதால் அவ்வூர் திருவையாறு என்னும் பெயருடன் விளங்குகின்றது. திருவையாற்றில் குடிகொண்டுள்ள இறைவன் 'அஞ்சேல்' என்று அடியார்கட்கு அடைக்கலம் அளித்து அருள் செய்கின்றான் என்று திருஞானசம்பந்தர் பாடினார்.

இதோ அவர் திருப்பாடல்:—

புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி
அறிவழிந் திட்டு ஐ மேல் உந்தி
அலமந்த போதாக 'அஞ்சேல்' என்றருள்
செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழை என்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவையாறே.

கொள்ளிடம், வடவாறு முதலிய ஊர்கள் யாவும் ஆற்றின் அடிப்படையில் பெயர் பெற்றவை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது

தமிழகத்தில் ஆறுகள் மிகுதியாகப் பாய்வதால் பயணம் செய்வோர் அடிக்கடி பாலத்தின் துணைகொண்டோ படகின் துணைகொண்டோ ஆறுகளைக் கடப்பது இயல்பு. இன்றைக்கு இருப்பதைப் போலப் பொறியியல் முறைப்படி கட்டப்பட்ட வலிமையான பாலங்கள் பண்டைத் தமிழகத்தில் மிகுதியாக இல்லை ஓடமும் படகும் இருந்தன. எனினும் ஆற்றின் ஒவ்வொரு துறையிலும் அவை இருந்திருக்க முடியாது தோணி இயக்குபவன் கீழ்க்குலத்தைச் சேர்ந்தவனுக இருப்பினும் அவன் குலத்தை எண்ணி அவனை யாரும் இகழமாட்டார்கள் என்று ஒரு தமிழ்ப்புலவர் (நாலடியார்) கூறியுள்ளார் படகு ஓட்டிச் செல்பவன் பயணிகள் ஆற்றைக் கடந்த பிறகு பயணக் கூலியை வாங்குவதில்லை. முன் கூட்டியே வாங்கிவிடுவான் என்று பழமொழி நானூறு பாடுகின்றது.

> ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
> போற்றும் எனவும் புணருமோ — ஆற்றச்
> சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே இல்லை
> மரம்போக்கிக் கூலிகொண் டார்
>
> — பழமொழி நானூறு : 1

பாலமோ ஓடமோ இல்லாத இடத்தில் மக்கள் நடந்தே ஆற்றைக் கடந்தார்கள். தண்ணீர் பாயும்போது ஆற்றைக் கடக்குங்கால் அச்சத்துடனேயே நடந்து கடந்தார்கள். தனியாக ஆற்றைக் கடக்க அஞ்சித் துணையுடன் கடந்தார்கள் என்பதை நம் நாட்டுப் பழமொழிகளும் அயல் நாட்டுப் பழமொழிகளும் நன்கு தெளிவுபடுத்துகின்றன.

‘ஆறு கடக்கிற வரை அண்ணன் தம்பி, ஆறு கடந்த பின் நீ யார் நான் யார்?’ என்பது தமிழ்ப் பழமொழி.

‘ஆறு கடக்கிற வரை நாராயணு நாராயணு ஆறு கடந்தபின் கூராயணு கூராயணு’ என்பது மலையாளப் பழமொழி.

‘ஆறு கடக்கிற வரை கரடியையும் மாமா என்று அழை’ என்பது ஆங்கிலப் பழமொழி. (Call the bear ‘uncle’ till You are safe across the bridge)

இப் பழமொழிகள் யாவும் ஆற்றைக் கடப்பது ஏதம் என்பதையும் ஆற்றைக் கடக்கும்போது மிக விழிப்பாக இருத்தல் வேண்டும் என்பதையும் நன்கு தெளிவு படுத்துகின்றன.

ஆற்றை நடந்து கடப்பதற்கு முன்னர் நீர் ஆழத்தை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இடுப்பளவுக்குக குறைவாக நீர் இருந்தால்தான் ஆற்றைக் கடக்க முடியும் என்

பது அனைவரும் அறிந்த உண்மை ஆற்றில் உள்ள மணலோ மண்ணோ ஒரே அளவாக - ஒரே சீராக இராது சில இடங்களில் மேடான மணல் குவிந்து இருக்கும், மணல்மேடு ஆங்காங்கே திட்டுத்திட்டாக இருக்கும். இத்தகைய திட்டுக்குக் குதிர் என்று பெயர். ஆற்றில இடுப்பளவுக்குமேல நீர் பாய்ந்து கொண்டிருந்தாலும், குதிர் மேலே மண்ணுக்குத் தெரியும். குதிரைக் கண்டால் ஆற்றில் நீர் ஆழம் இல்லாதது போல் தோன்றும். எனவே ஆற்றைக் கடப்பவர்கள் கண்ணுக்குப் புலப்படாத மடுவின் ஆழத்தை உணராமல் கண்ணுக்குத் தென்படுகின்ற குதிரை மட்டுமே நம்பிக்கொண்டு ஆற்றினைக் கடக்க முயல்வதுண்டு. அவர்களைப் பர்த்து அறிவுரையும் எச்சரிக்கையும் வழங்கும் வகையிலும் கேள்வி கேட்பதைப் போலவும் தமிழில் ஒரு பழமொழி அமைந்திருக்கின்றது.

‘மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கலாமா?’ என்பதே அப்பழமொழி (குதிர் + ஐ = குதிரை — இரண்டாம் வேற்றுமை) அறவுரையாகவும் அறிவுரையாகவும் விளங்குகின்ற நயன்மை மொழியாகிய இப்பழமொழி பகுத்தறிவு அடிப்படையில் அமைந்துள்ளது என்பது சொல்லாமலே விளங்கும்

‘மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கலாமா?’ என்று விளங்குகின்ற பழமொழி மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா, என்னும் வடிவத்தில் நம் காதில விழுகின்றது இது உண்மையான பழமொழிதானா என்பதை இவண் ஆழ்ந்து ஆய்தல் வேண்டும். மண் குதிரை (குதிர்) நம்பி ஆற்றில் இறங்குவார்களே தவிர மண்ணால் ஆகிய குதிரையை - மண் குதிரையை நம்பி யாராவது ஆற்றில் இறங்குவார்களா? மண் குதிரை இயங்குமா? மண் குதிரைமேல் ஊர்ந்து செல்ல இயலுமா? மண் குதிரை இயங்காது என்பதும், மண் குதிரை மேல் ஊர்ந்து செல்ல இயலாது என்பதும் மக்களுக்குத் தெரியாதா? மண் குதிரையை நம்பி. மண் குதிரைமேல் ஊர்ந்து இதுவரை யாராவது ஏமாறிப் போனது உண்டா? மக்கள் மண்குதிரை (குதிர்) நம்பி ஏமாறிப் போவதற்கு வாய்ப்பு உண்டு வடிகட்டின முழு மடையன் கூட மண்ணால் ஆகிய குதிரைமேல் அமர்ந்து ஆற்றைக் கடக்க முயலமாட்டான். மண்ணால் செய்த படிமம் ஆற்றைக் கடக்கும் போது தன்னையே காத்துக்கொள்ள முடியாது என்பது சீனப் பழமொழி. எனவே இவ்விரு பழமொழியையும் காய்தல் உவத்தலின்றி ஆழ்ந்து ஆராய்ந்தால் குதிர்ப் பழமொழியே உண்மையான பழமொழி என்றும் குதிரைப் பழமொழி போலிப் பழமொழி என்றும் தெளிவாக உணரலாம்.

# "சேலநாட்டு – காவேரிப்பூம்பட்டணம்"

பேராசிரியர். சி. கோவிந்தராசன்
பழம்பொருள், கல்வெட்டு ஆராய்ச்சியாளர்,
கரந்தை, தஞ்சை.

"சேலத்தில் ஓர் காவிரிப்பூம்பட்டினம்" என்ற தலைப்பில், கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் பணியாற்றும் திரு அ. இராசேந்திரன், சென்ற தமிழ்ப்பொழில் துணர் 46 மலர் 10-ல் ஆராய்ச்சிக் கட்டுரையொன்று எழுதியுள்ளார். தமது ஆராய்ச்சிக்குரிய கல்வெட்டுகளாக அவர் காட்டியுள்ளவை. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி நான்கில், கல்வெட்டு எண் 164—166 ஆகிய மூன்று கல்வெட்டுகளாகும். ஆராய்ச்சியாளர் கூறும் செய்திகளைக் கொண்டு கல்வெட்டுகளையும் அவற்றின் செய்திகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது. கட்டுரையிலுள்ள கருத்துக்கள் பெரும்பான்மையும் பொருத்தமில்லாமலிருப்பதால், அதற்கொரு விளக்கமாகவே இக்கட்டுரை எழுத வேண்டியதாயிற்று.

கட்டுரையின் முதற் பகுதியில் 'ஊர்ப் பெயர்' என்ற தலைப்பில், "இவ்வூர் சேல நாட்டின் உபநாடான இராசீபுர நாட்டில் உள்ளதெனக் கொங்கு மண்டல ஊர்த்தொகை குறிக்கும். [3] இவ்வூரைக் கரபுரம் எனத் தல புராணம் குறிக்கிறது. [4] இக்கோயில் கல்வெட்டு இவ்வூரைச் சேல நாட்டு உத்தமசோழபுரமான மெய்த்தலைக் காவிரிப்பூம்பட்டினம் [5] என்று கூறும். கரபுரம் என்ற பழைய பெயர் உத்தமசோழன் (கி. பி. 970—985?) ஆட்சிக் காலத்தில் உத்தமசோழபுரம் என்று மாற்றப்பட்டிருக்கலாம். "

என்று விளக்கப்பட்டிருப்பதுடன், அடிக்குறிப்பில் S. I. I. Vol IV No. 164, என்றும் ஆய்வாளர் கூறியுள்ளார். ஆய்வாளர் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட கல்வெட்டுப் பகுதி:—

"மஹா பிரதாபராயன் திப்பரச அய்யனுக்குச் செல்லாநின்ற காலத்து சேலநாட்டு உத்தம சோழபுரமான மேற்த்தலைக் காவேரிப்பூம்(ப்)பட்டணத்தில் உத்தம சோழச் செட்டி ஆதித்த தேவன் இன்னுட்டு உத்தம சோழபுரத்துக் கரபுரமுடைய நயினூற்க்கு திருநாமத்துக் காணியான —" (S. I. I. Vol IV Ins No. 164) என்பதேயாகும்.

கல்வெட்டில். "சேல நாட்டு உத்தம சோழபுரமான மேற்த் தலைக் காவேரிப்பூம்பட்டணத்தில்" என்றே எழுதப்பட்டுளது. இத்தொடரிலுள்ள சொற்களுள், மேற்த்தலை எனபதை மெய்த் தலை என்றும், காவேரிப்பூம்பட்டணம் என்பதை காவிரிப்பூம் பட்டினம் என்றும், ஆய்வாளர் மாறுபடக் கூறியுள்ளார்.

சோழ நாட்டில், கடற்கரையைச் சார்ந்துள்ள காவேரிப் பூம்பட்டினத்தின் பெயரால், கொங்குமண்டலத்தில் காவேரி யாறு தோன்றி ஓடிவரும் மேலைப்பகுதிக்குரிய நாட்டில சோழருடைய காலத்தில் காவேரிப்பூம்பட்டணம் என்னும் பெயரால் ஊரொன்றிற்குப் பெயரிட்டுள்ளதை இக்கல்வெட்டுச் செய்தியால் அறிய முடிகின்றது. கடற்றுறைக் காவிரிப்பூம்பட்டினத்தின் நினைவாக உள்நாட்டிலுள்ள ஊரொன்றிற்குப் பெயரிடப்பட்ட தாயினும், அதனின்றும் வேருனது என்பதைக் காட்டும் அறி குறியாகவே மேற்த்தலை (மேல்தலை) என்னும் அடைமொழியுடன் "காவேரிப்பூம்பட்டணம்" என்றும் தெளிவாகக் கூறப்பட்டுளது குறிப்பிடத்தக்கதாகும். காவிரி என்னும் பெயர் காவேரி என்று கூறப்பெற்றிருப்பது வழக்கேயாம். ஆய்வாளர் கூறியுள்ள பட்டினமென்ற பெயர் கல்வெட்டில் கூறப்பெருமல் 'பட்டணம்' என்றே பொருளமைந்த நிலையில் கூறப்பட்டுளது அறியத் தக்கதாகும்.

பட்டினம் கடற்றுறை நகரம். (நெய்தல் நிலத்தூர்) பட்டணம் உள்நாட்டு அமைந்த மக்கள் தொகை மிகுந்த ஊர். (மருத நிலத்தூர்) இப்பொருளறி குறிப்புடனேயே சேல நாட்டு ஊர், காவேரிப்பூம்பட்டணம் என்று தெளிவாகக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுளது. ஆனல், இதனைப் பிறழவுணர்ந்ததோடல் லாமல் கட்டுரையின் தலைப்பையும் "சேலத்தில் ஓர் காவிரிப்பூம் பட்டினம்" என்று தந்திருப்பது வியக்கத்தக்கதாகும். கல்லெழுத்துக்கள் குறிப்பதற்கு மாருனதுமாகும்.

மற்றும், "கரபுரம் என்ற பழைய பெயர் உத்தம சோழன் ஆட்சிக்காலத்தில் உத்தமசோழபுரம் என்று மாற்றப்பட்டிருக் கலாம்." என்னும் ஐயத்தோடு கூடிய கருத்தினையும் கூறியுள் ளார். இவர் இதற்கு எடுத்துக்கொண்டுள்ள சான்று, அட் டாவதான சொக்கலிங்கப் புலவர் எழுதிய கரபுரநாதர் தல புராணமாகும். இப்பகுதியில், தலபுராணம் எக்காலத்தில் பாடப்பட்டது? அது குறிக்கும் கரபுரமென்பது யாது? தாம் மேற்கொண்ட கல்வெட்டெழுந்த காலமென்ன? உத்தமசோழ

னது ஆட்சிக்காலம் எது? என்பனவற்றை முறையுறப் பொருந்தியவாற்றான் கண்டு கூறப்படவில்லை.

கல்வெட்டில், "உத்தம சோழபுரத்துக் கரபுரமுடைய நயினுற்கு" என்ற தொடரே உளது இதனல், உத்தம சோழ புரத்திலுள்ள கரபுரம் என்ற தலத்திலமர்ந்த பெருமான் என்ற பொருளே பெறப்படும். இதற்குச் சான்ருக, 'திருவையாற்று ஒலோகமாதேவீச்சரமுடையார்' 'நாகைப்பட்டினத்து திருக் காரோணமுடைய ஈஸ்வரம்' 'தஞ்சை இராசராசேச்சரமுடையார்' என்ற, தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டுப் பகுதிகள் ஒப்பிட்டு அறியத்தக்கவாகும். மற்றும்,

உத்தமசோழபுரமான மேல்தலைக் காவேரிப்பூம்பட்டணத்தில் என்று கல்வெட்டு கூறுவதால் உத்தம சோழ புரமென்று கூறப்பெறும் மேற்றலைக்காவேரிப்பூம்பட்டணம் என்பது விளக்க மாகின்றதே தவிர, கரபுரமென்று பெயருள்ள ஊர், மெய்த்தலைக் காவிரிப்பூம்பட்டினம் என்று கூறப்பட்டுள்ளதாகக் கல்வெட்டில் செய்தியில்லை.

ஆய்வாளர் மேற்கோள் காட்டும் தலபுராணம் கி. பி. 18, அல்லது 19-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த புலவரால் செய்யப் பட்டதாகும். கல்வெட்டு, விசய நகரப் பேரரசர் கிருஷ்ணராயர் காலமாகிய கி. பி 16-ஆம் நூற்ருண்டின் முற்பகுதிக்குரியது. உத்தம சோழன் ஆட்சி கி. பி. 10-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதி யாகும். இதில் 'புராணம் குறிக்கும் கரபுரமே உத்தமசோழன் ஆட்சியில் மாற்றப்பட்டிருக்கலாம்' என்று கொள்ளுதற்கு என்ன ஒப்புமையுளது? கரபுரம் கோயிலுக்குரிய தலத்தைக் குறிக்கின் றது. உத்தம சோழபுரம் அக்கோயிலுள்ள ஊரைக் குறிக்கின் றது. 'உத்தம சோழபுரத்துக் கரபுரமுடைய நாயனர்' என் பதே கல்லெழுத்துக்கள் குறிப்பதாகும்.

இரண்டாவது கல்வெட்டினைக் கொண்டு ஆய்வாளர் தரும் உரை:

"கருவறையின் மேற்குச் சுவரில் ஒரு பாடல் சாசனம் உண்டு. அவற்றின் வடிவம் சிதைந்து முதல் நான்கு வரிகள் மட்டுமே கிடைத்தன. பொன்னுகன் என்போன், கொங்கோனைப் புறங்கொண்ட செய்தியைக் கூறுகிறது" என்பதாகும். இதற் குரிய கல்வெட்டினையோ, பகுதியையோ குறித்திலர். அக்கல் வெட்டு:

1. சங்கெட்டல் கோழிய [ர்செ] பா [ன்[ கொட்டைவா
2. ழூ சதிமறையொன் செங்கெவடி [யர்]க்கு பொன்
3 சென்னி பொன்னுயன் செழு
4 ஞ் (ச்) சிலம்பில் கொஙகோனை [1]

( S. I. I, Vol IV Ins No. 165. ) ( 1. Fragment ) என்பதேயாகும்.

'பொன்னுயன்' என்ற பெயரைப் பொன்னுகன் என்றும், 'செழுஞ்சிலம்பில் கொங்கோனை' என்ற பகுதியைக் கொண்டு கொங்கோனைப் புறங்கண்டான் பொன்னுகன் என்றும் கருதிக் குறித்தவர், மேலே. சோழனுக்குரிய பொன்கோட்டை என்னும் ஊரில் வாழ்ந்த நான்மறையாளன் செங்கேவடிக்கு பொன், சென்னி பொன்னுயன், என்ற செய்திகளைக்கொண்டு எஞ்சிய பகுதிகளைக் கருதிக் கூறினரில்லை. 'பொன்னுகன் கொங்கோனைப் புறங்கண்டான்' என்பதற்கும் சான்றுகள் வேண்டும். இஃது ஒருபுறமிருக்க,

தொடர்ந்து ஆய்வாளர், ''வரலாற்றில் மாற்றம்'' என்ற தலைப்பில் பெரியதொரு காலவேறுபாட்டினை, முதல் இராசராசன், முதல் இராசேந்திரன் ஆகிய சோழ மன்னரது வரலாற்றில் எடுத்துக்காட்டியுள்ளார். அவர் தரும் கருத்துக்கள்:

''இக்கோயிலின் மகா மண்டபத்தில் பாவைப்பட்டுள்ள நடு கல்லில் இராசராசனின் 9-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு அழிந்துபட்ட நிலையில் காணப்படுகிறது. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை சுந்தரதேவர் (இராசராசனின் தந்தை?) நாச்சிமார் இருவர் (மனைவியர்:) பிள்ளைமார். இராசேந்திர சோழ தேவனின் எட்டாம் வயதில் கலி நீங்கிய பட்சத்தில் நடந்த செய்தியைக் குறிக்கிறது. கல்வெட்டின் பிற்பகுதி உதிர்ந்து பட்டது.''

முதல் இராசராசன் தமது 6-ஆம் ஆட்சியாண்டில் ஈழத்தை இராசேந்திரன் தலைமையில் படையனுப்பி வென்றுன் என்று கூறுவர். 'இவ் ஈழப்போரில் இராசேந்திரன் கலந்து கொள்ள வில்லை என்பதற்கு இக்கல்வெட்டின் மூலம் விளக்கம் கிடைக்கிறது.' 'மேலும் பண்டாரத்தார் கி. பி. 991-க்கு முன்னர் நடைபெற்ற நுளம்பப்போர். கங்கப் போர்களிலும் இராசேந்திர சோழனே தலைமை வகித்து நடத்தினுன் என்பார்.' 'இராசேந்திர சோழன் இளவரசு பட்டம் பெற்றபோது (கி. பி. 1012) முப்பது வயதுக்குக்கீழ் இல்லை என்பார்.' 'வலிமை மிக்க

இம்மூன்று போர்களில் 10 வயதிற்கு கீழ்ப்பட்ட சிறுவன் முன் னின்று நடத்தினன் என்பது பொருந்தாமை கண்டு கொள்க ' என் றெலாம் கூறியிருப்பதுடன், இப்பகுதிக்குரிய கருத்துரையாக,

" மேற்கண்ட இவ்வுத்தம சோழபுரக் கல்வெட்டு இராசராச சோழனின் ஒன்பதாம் ஆட்சியாண்டில் இராசேந்திர சோழ னுக்கு எட்டு வயது எனக் குறிப்பதால் ஈழப்போர் நடந்த போது இராசேந்திர சோழனுக்கு 5 வயதும். கங்க நுளம்பப் போர்கள் நிகழ்ந்தபோது இரண்டு முதல் 4 வயதுக்குட்பட்ட ஒரு சிறுவன் என்பதும் தெளியும். "

என்று திரு T. V சதாசிவ பண்டாரத்தாரின் 'பிற்காலச் சோழர் வரலாற்றுப் பகுதிக்கு மறுப்புரை கூறி, தாம் கண்டு பிடித்துள்ள கல்வெட்டுச் செய்திகளால் பலவாறு விளக்கந் தந்து நிறுவியுளார் இவ்வாறு, ஆய்வாளர் கூறுதற்குரிய கல்வெட்டினை ஈண்டு எடுத்துக் காட்டுதல் நலமாம்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ இருஜாதிரா
2. ஜதேவர்க்கு யாண்டு கூ
3. ஆவது ......... பல்லவரை
4. யன் நாட்டு உத்தமசோ
5 ழபுரத்து கரபுரமுடையந
6. ாயனுர் கோயிலில் ........
7. ...... குந்தை பெருமான்
8. சுந்தரதேவரும் நாச்சி —
9. மாரிருவரும் பிள்ளையார் இ
10. ஷபரும் இராஜேந்திரசோ
11. ழதேவர்க்கு எட்டாவதி
12. ல் கலிகடிந்த பச்செ .. ......
13. தெற்கு ... ... யொடு டையந
14. யினர் இத்தேவர்க் [2]

( S. I. I. Vol IV Ins No 166 ) ( 2 The stone is broken and the missing portion ca not be traced. )

என்ற அளவேயாம் இக்கல்வெட்டு முதல் இராசராசனுடையது என்று கருதி ஆய்வாளர் தெளிவாகக் கூறியுள்ளார். கல்வெட்டு, இராசராசனின் பெயரன் இராசாதிராசனல் வெட்டப்பட்டுள் ளதைக் கல்லெழுத்துக்கள் விளக்கமாகக் குறிப்பிடுகின்றன.

இராசராசனின் 'பெயரன் இராசாதிராசன் ஆதலினால் ஆய்வாளர் பாட்டன் பெயராலேயே பெயரன் இராசாதிராசனைக் கண்டு, அதன் வழியே கல்வெட்டுச் செய்தியை உணர்ந்து, அதற்கேற்ப இராசேந்திர சோழன் வயதை ஆய்வு செய்து, சோழர் வரலாற்றில் புரட்சியான மாற்றம் கூறி, பண்டாரத்தார் கருத்தையும் மறுத்துள்ளார்.

மேலே கண்ட கல்வெட்டில்,

இராசாதிராசன், தன் தந்தை இராசேந்திர சோழன், தனது ஆட்சியாண்டு எட்டில், (கி. பி 1020.) தனக்குற்ற தீங்கொன்று நீங்கிய காலத்தை முன்னிட்டதாக, கரபுரமுடைய நாயனுர் கோயிலில், தன் பாட்டனர் குந்தவை பெருமாள் என்று கூறப்பெறும் சுந்தர சோழ தேவர்; நாச்சிமார் பராந்தகன் தேவியம்மன், வானவன்மாதேவி; பிள்ளையார் இஷபர் ஆகியோருக்கு அமைக்கப்படட பிரதிமங்களுக்கு ஏதோ நிவந்தங்கள் செய்திருப்பதை, இராசாதிராசன் தனது ஆட்சியாண்டு ஒன்பதில் (கி பி 1027.) ★ இக்கல்வெட்டாலும் புலப்படுத்தியுள்ளான் என்பதே செய்தியாகும் கல்வெட்டின் பிற்பகுதிகள் சிதைந்து விட்டதால் நிவந்தம் பற்றியறிய இயலவில்லை. ஆயினும், ஆய்வாளர் கொண்டுள்ள செய்திகட்குரிய பகுதிகள் உள்ளன

இக்கல்வெட்டில், முதல் இராசராசனுடைய ஆட்சியாண்டு 9-ல் இராசேந்திரனுக்கு வயது எட்டு என்று கொள்வதற்கு என்ன செய்திகள் உள்ளன? கல்வெட்டிலுள்ள 'பிள்ளையார் இஷபரும்' என்பதற்குப் பிள்ளைமார் என்றும், இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை சுந்தர தேவர் (இராசராசனின் தந்தை?) என்ற வினக் குறிப்புடன் குழப்பமாகவும் கட்டுரையில் கூறியுள்ளார். கல்வெட்டில் "கரபுரமுடைய நாயனர் கோயிலில் .. குந்தவ பெருமாள் சுந்தர தேவரும், பிள்ளையார் இஷபரும், இராசேந்திர சோழ தேவர்க்கு எட்டாவதில்" என்றே எழுதப்பட்டுளது. இதில் இராசேந்திர சோழனுக்கு எட்டாவது என்பதை, வயது எட்டாவது என்று ஆய்வாளர் கொண்டுள்ளார். கல்வெட்டுச் செய்திப்படி 'ஆட்சியாண்டு எட்டு' என்பதையே அது குறிக்கும்

'ஈழ நாட்டுப் படையெடுப்பு இராசேந்திரனல் நடந்ததென்றும் கூறுவர் என்று எழுதும்போது அச்செய்தியைக்

★ இராஜாதிராஜனுடைய ஆட்சியாண்டு, இளவரசுப் பட்டம் பெற்ற கி. பி. 1018 லிருந்து கணக்கிடப் பெறுவதாகும்.

கூறியவர் இன்னுரென்பதைக் குறிப்பிடும் அடிக் குறிப்பாக, (10) The Chola Part I 205, T. V. சதாசிவ பண்டாரத்தார் என்று எழுதியுள்ளார்.

'The Cho'a' என்ற தலைப்புடைய வரலாற்று நூல் பண்டாரத்தாரால் எழுதப்பட்டதா? திரு நீலகண்ட சாத்திரியாரல்லவா எழுதியுள்ளார்! தமது கருத்தினைச் சாத்திரியாரும் கூறுகின்ருர் என்னும் கருத்தொப்புமைக்கன்றே பண்டாரத்தார் தமது "History of Later Cholas" என்னும் நூலுள் அடிக் குறிப்பாக, பக்கம் 110-ல் குறித்துள்ளார் கல்வெட்டினைப் பிழையாகவுணர்ந்து எழுதிய கருத்துப் பிழைக்கு மேலாக குறிப்புப் பிழையும் காணப்படுகிறது. திரு சதாசிவ பண்டாரத்தார் மிகத் தெளிவாகவே இராசேந்திர சோழனின் வரலாற்றினைத் தக்க சான்றுகளுடன் எழுதியுள்ளார் என்பது ஈண்டு அறியத் தக்கதாகும்.

அடுத்து, கட்டுரையின் மற்ருெரு உட்பிரிவாக. "நிலக் கொடை" என்ற தலைப்பில் கூறியுள்ள செய்திகள்:—

"நிலக்கொடை: மூவராய கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதாருகிய கிருஷ்ணராயன் 20-ஆம் ஆட்சியாண்டு (?) கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது." என்பதாகும்

தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி நான்கிலிருக்கும் கல்வெட்டினைக் கண்டு எழுதும்போது. "கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது" என்று தொடரும் ஆய்வாளருக்கு கிருஷ்ணராயன் இருபது ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்று எழுதுவதிலும் வினுக்குறியிட வேண்டிய நிலை என்ன என்பதை அறியோம்! ஆனல் கல்வெட்டில், தமிழ் எண்களால் யாண்டு குறிக்கப்பட்டுளது மற்றும், கிருஷ்ணராயனுக்கு உரியதாக தமிழிலுள்ள இரண்டு விருதுப் பெயர்களைக் கூறியுள்ளாரே தவிர இவற்றிற்கு முற்பட கல்வெட்டின் தொடக்க முதல் கிரந்த எழுத்துக்களில் தொடரும் சிறந்த விருதுப் பெயர்களைக் கூறவில்லை. எனவே, ஈண்டு கல்வெட்டின் முற்பகுதியினை மட்டும் தெளிவாக எடுத்துக்காட்டுதல் இன்றியமையாததாகும்.

1. ஸுபமஸ்து நன்ருக உ ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமந் மஹாமண்டலேஸ்வரன். ஹரிஹரராய விபாடன், பாஷைக்குத் தப்புவ ராயர் கண்டன், மூவராயர் கண்டன், கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் ஸ்ரீ கிருஷ்ணராயற்கு, யாண்டு உயிஎ வது

2. மஹா பிரதாபராயன் திப்பரச அய்யனுக்குச் செல்லா நின்ற காலத்து, சேலநாட்டு உத்தம சோழபுரமான, மேல்தலைக் காவேரிப்பூம்பட்டணத்தில் உத்தமசோழச் செட்டி ஆதித்த தேவன், இன்னாட்டு உத்தம

3. சோழபுரத்துக் கரபுரமுடைய நாயனார்க்கு, திருநாமத்துக் காணியான —" (தொடர்ந்து நிலநிவந்தம், எல்லைகள், காப்புரைகள் உள்ளன.)

இக் கல்வெட்டில் கிருஷ்ணராயற்கு யாண்டு 27-என்று தெளிவாகக் குறிக்கப்பட்டுளது. வினாக் குறியுடன் 20-என்று குறிப்பிடுவதற்குரியதாக எழுத்துக்கள் மறைந்தோ குறைந்தோ கல்வெட்டில் இல்லை.

'கிருஷ்ணராயனது ஆட்சி யாண்டின் தொடர்ச்சி 27-ல் விசயநகரப் பேரரசின் மண்டலத் தலைவர்களாக அமைக்கப் பட்டிருந்த தலைவர்களுள் ஒருவரான மஹா பிரதாபராயன் திப் பரச அய்யனது ஆட்சி (சேல நாட்டில்) நிகழும் காலத்தில், உத்தம சோழ செட்டி என்பான், உத்தம சோழ புரத்திலுள்ள கரபுரமுடைய சிவபெருமானுக்கு, திருநாமத்துக் காணியாக நில நிவந்தம் செய்துள்ளான்.'

இதுவே கல்வெட்டின் பகுதியால் அறியப்பெறும் செய்தி யாகும். ஆனால், ஆய்வாளர் ஏதேதோ குழப்பமாகக் கூறியிருப் பதுடன், கட்டுரையின் பிற்பகுதியாக கல்வெட்டில் இல்லாத காப்புரைகள் பலவற்றை எடுத்துக் காட்டி கல்வெட்டிலுள்ள கிரந்தப் பகுதிகளை விடுத்து ஆராய்ச்சி உரையினை நிறைவு செய்துள்ளார்.

கல்வெட்டிலுள்ள காப்புரைப் பகுதி:

" இத்தன்மம் சந்திராதித்தியவரையும் நடக்கக் கடவதாக வும், உத்தம சோழ செட்டி ஆதித்த தேவன் இத் தன்மத்தை நடத்தினவன் சீபாதம் இரண்டும் என் தலை மேலே. இத்தன் மத்தை இலிங்கனம் பண்ணுவான் கெங்கைக்கரையில் குரால் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவான். பிர்மஹத்தி பண்ணுவான். ஏழெச்சம் அறுவான் +" என்பதாகும்.

இதுபோன்ற கருத்துள்ள செய்திகளையும், வரலாற்றுச் சான்றுகளையும் தருவனவாகவுள்ள கல்வெட்டுகளை முறையுடன் கற்றறிந்த அளவிலேயே, அவற்றைக்கொண்டு வரலாற்று விளக்கமோ, மாற்றமோ, எழுதுவது சிறப்புடையதாகும்.

( சென்ற இதழின் தொடர்ச்சி )

# கம்பரின் வீரச்சுவை

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ , பி எல் , தஞ்சை

இரணியப் படலம், கம்பரது கலைச் செல்வப் படைப்பின் ஆற்றலுக்கும் இயற்கைப் புலமைக்கும் உறு சான்ருக அமைந் துள்ளது. இறை பற்றிய கருத்துக்களும் மெய்ப்பாடுகளும் இப்படலத்தின்கண் உரங்கொண்டு, மெய்ஞ்ஞானம் பழம் போன்று திகழும் வகையில், கம்பர், இறைவனுண்மையையும் அறநெறியினையும் உயிரின் கண்ணுக்குப் புலனுக அமையும்படி, அறம் இறுதியில் வீரத்துடன் வெல்லுவதோடமையாது என் றும் வாழுமென்பதையும் தெளிவாக்குகிருர் எனவே இரணி யனை யழித்த நாராயணனே இராமராக வந்துள்ளதை இரணி யப் படலத்தில், ஐந்தவித்த அருளுடைய விபீடணான் கூற்ரு கக் காட்டி திருமால் கூறனே, இணையில் வீரனுகிய இராவணன் வணங்கி யுய்யுமாறு எழுந்தது இப்படலம். ஆகவே, அழிவுக்குப் பயன்படும் போரினை அறநெறி கொண்டு நன்மை பயக்குமாறு முனைந்து நின்றது இரணியப் படலமென்க இப்படலத்தின் கண் போர்க்களத்தை ஆத்ம வெளியாக்கி இறையினை உலகியல் பொருள்களனைத்திலும், உலக மனைத்தையும் இறையிலும் காணும் ஞானத்தைப் புகட்டி மக்களுக்கு ஊக்க மூட்டும் வகை யில், அவர்களது வீர மனோபாவங்களையும் முயற்சித் திறன் களையும் தெய்வ அழகுடன உயர் நிலைக்கு முன்னேறிச் செல்லும் படி செய்து, இறை உலகிடை வாழவரும் உயர் தத்துவத்தைக் கம்பர் உண்மையின் விளக்கமாய் அமைத்து விடுகிருர். மற்றும் வாழ்வுக்குரிய வீரவுள்ளத்தை வளம் படுத்துவது இறையுணர் வென்றும், இறையுணர்வால் வீரம் உயிரை வளர்த்து அறத் தையும் ஒழுக்கத்தையும் நல்குகிறதென்றும், அத்தகைய வீரம் உலகியல் தத்துவங்களில் தேக்கப்பட்டிருக்கும் உண்மையுணர் வுப் பொருளியல்களை கட்டவிழ்த்து ஆத்ம போதத்தைப் பெருக்குமென்றும் இப்படலத்தின்கண் அறிவுறுத்திய பான்மை பெரிதும் நினைவு கூர்ந்து இன்புறற்பாலது. அற்புதமாய் காவியக் கதையுடன் பின்னிப் பொலிவுடன் அமைந்துள்ள இப்படலம் உண்மை ஞானத்திற்குரிய வாழ்வுக்கு, காலமெல் லாம் ஓர் வழி காட்டியாகயிருப்பதினுல், அதனை முறையாக நுனித்தறிந்து கொள்ளாது, யுத்த காண்டத்திலினின்றும் இப் படலத்தை எடுக்க யாவரேனும் ஒருப்படுவராயின், அது காவி

யத்தின் குற்றமன்று. கடவுட் கலப்புடன் தெய்வ சித்தியில் உள்ளபடி அறிந்து, தெய்வவொளி பெற்று வாழ இப்படலம் ஊக்கமூட்டும் கருத்தழகினை செழுமை மிகக் கொண்டு, நுவல றிய வேதப் பொருளாய் இழைந்து நிற்றலின், இதனை எந் நிலையினும் இகழ்ந்தொதுக்குதல் நன்றன்று.

வீரிய அகந்தையாலும் மனப்பிழையாலும் இராவணனது அரக்கத் தன்மை, காம வடிவாகப் பகை வன்மைகள் கொண்டு, அவனை வயப்படுத்தி, கடவுளியல்பினராய இராம இலக்கு மணரை எதிர்க்கத் துணிந்ததைக் கம்பர் தன் காவியத்தில் தெளியப்படுத்தியுள்ளார். அதனுன் அறவோர் அரக்கருடன் அமர்புரிய வேண்டிய தாயிற்றுதலின். கம்பர், வீரிய வுலகத்தின் கண் உலவும் பகை வன்மைகளை ஒழிக்க வலிகோலி. அகவீரத் தின் அழகுடைய ஆற்றலை, ஓர் மையமாகக் கொண்டு அதன் சுற்றுப்புறச் சூழலாக, புறத்தின் பாற்படும் பெருமித வீரச் சுவையினைப் போர் முறையில் விளக்கியது கருத்திற் பதித்தல் வேண்டும். இதனை யுத்த காண்டத்தில் சிறப்புற போரின் வீர முழக்கங்களுக்கிடையே அறிவினையும், அதன்வழி மன வமைதியின் இனிமை யுணர்வினையும் சற்றேபெறுமாறும் கம்பர் அமைத்து, பெண்மையென்னும் ஆற்றலின் தத்துவத்தில் இடை யருது ஒளிவிட்டு மிளிரும் கற்பென்னும் தெய்வச் சுடரின் வழி நமக்கு கம்பர் அறிமுகம் செய்து வைக்கும் சீரிய இயல்பு உன் னற்பாலது. தீண்டாத கற்போடிணைந்த பெண்மையின் மேன் மையினை சீதைபால் கம்பர் காட்டி. அக்கற்பின் சக்தியால், உலகிடை நிலவும் அசுரப் பகை வன்மைகளும், அகந்தை தின வின் இருள் வன்மைகளும், இல்லாதொழியும் நெறியினைச்சுட்டி, அகவீரக் கற்பு, பெண்மையில் துளிர்க்கும் கடவுளினியல்பைக் கண்டொழுகும் சுதந்தரத்தையும் கம்பர் பேண வைத்துள்ளார். மாயா சனகப் படலத்தில்

'ஊண் இலா ஆக்கைபேணி உயிர் புகழ் சூடாது, உன்முன்
நாண் இலாது இருந்தேனல்லேன்: நவையறு
குணங்களென்னும்
பூண் எலாம்பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்திதன்னைக்
காணலாம் இன்னும் என்னும் காதலால் இருந்தேன்,
கண்டாய்'

என, தாழ்வுடன் காதல் இரக்க வந்த இராவணனிடம், புலன் களை வென்ற அறிவென விளங்கும் சீதை வீறுடன் கூறும் வாதம், பகையிலாது பகுத்தறிவின் பாற்பட்டு, வீரச் சுவையினை

அகவழியில் ஊட்டும் பான்மையது. இப்பாட்டினில் கற்பில் நிற்கும் சீதையின் தீரமாய பண்பினையும். கற்பினை நாற் பண்புடன் காக்கும் தன் பேராண்மையால் விளைந்த வீரத்தினையும் கம்பர் பொலியக் காட்டி, அதற்கு ஏற்றமும் கூறிய முறை மகிழ்ச்சிக் குரியது.

இராமர் தன்னை வந்து மீட்பாரெனும் காதலால், வீரப் பொறையுடன் தற்காத்துத் தற்கொண்டாரது அன்பில் திளைத்து அதனில் பெரிதும் சீதை வீறுடன் ஈடுபட, அத்தகைய அன்புருவம் அவளது உயிரோடு உளதாகிப் பின் உள்ளத்தில் குடிகொண்டு புலன்கள் மூலமாக உணர்ச்சிகளின் வழி கலந்து நிற்பதைத் தன்னுளே காணக் காண, அதனுன் சீதை இரக்கமே ஏந்திழை வடிவம் எய்தியுள்ளதாகக் கம்பர் நம் அகக் கண்ணெதிரே தோன்றும்படிச் செய்து விடுகிருர். இத்தகையவாறு இராமனும் அன்பினிலே ஒன்றி நிற்கும் சீதையின் ஞானவிடாப் பிடியும் வைராக்கியமும் அவளது ஆத்மார்த்த கற்போடு பிணைந்து வீரப் பண்பின் எல்லையைச் சுட்டி பெருமிதத்துக்கு நிலைக்களமாக அமைந்துள்ளது காணப்படும் ( Bravery is not the quality of the body but of the soul )

'அரக்கியர் அளவு அற்ருர்கள் அலகையின் குழுவும் அஞ்ச
நெருக்கினர் காப்ப நின்பால் நேசமே அச்சம் நீக்க
இரக்கம் என்று ஒன்றும் தானே ஏந்திழை வடிவம் எய்தித்
தருக்கிய சிறையுற்றன்ன தகையள் அத்தமியள் அம்மா!

என்ற விருத்தப்பாவில் எடுத்தாளப்பட்ட சீதையின் வீரக் கற்பில் திளைக்கின்ற இரக்கம். நாண மாதி நாற் பண்புகளுடன் ஒளிரவே, அது கம்பருக்கு கடவுட் காட்சியாக மிளிர்ந்து இன்பூட்டி, 'என் பெருந்தெய்வம்' என அவர் வாயாரப் போற்றிப் புகழும்படியும் செய்துள்ளது. ஈண்டு, 'தருக்கிய சிறையுற்றன்ன தகையள்' என்பதில் கம்பர் சிறையெனும் மொழியைத் தவம் என்ற பொருளில் பெய்து வைத்துள்ளமை பெறப்படும்.

சீதையின் கற்புத் திண்மையில், கற்புகளிநடம் வீரமுறப் புரிவதைக் கம்பர்,

'விற்பெருந்தடந் தோள்வீர ! வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந்தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன் ;
இற்பிறப்பு என்பதொன்றும் இரும்பொறை
என்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரிய கண்டேன்'

என அனுமானைக் காணுமாறு வைத்த நுட்பம், சீதையின் கற்புக் காட்சியின் அழகினையும் வீரப் பொறையினையும் விளங்க வைக்கும் பான்மைத்து அறிவு, இச்சை செயல்வழி, இசைமை கொண்டு தவம் செய்த தையல்பால்' அக வீரத்தைக் கம்பர் புலப்படுத்தி, பிழை பொறுக்கும் இரக்கப் பொறையினையும் நோவுறுத்தாமையினையும் அவளது வீரத்தில் விளைந்ததாகத் திகழ வைத்தது அறிதற்பாலது (Sita is an incarnation of Ahimsa) இதன்வழி உலகியல் இன்பத்தை வேண்டாது என்றும் தம் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு பிறவுயிர்கட்கு உறுகண் செய்யாத தவவன்மையோடு இறையை நாடும் ஓருயிர் வீர விடுதலையினைப் பெறும் முறையையும் கம்பர் நன்குணர வைத்தார்.

போரினில் கடுமையாய வீரங்காட்டியும் இன்னலை எதிர்த்தும் ஆண்கள் பொதுவாக வாழ்வின் பயனைப் பெற்றதும் பெறாததுமாக, அழியும் இன்பத்தை விரும்பிப் பெறுவர் என்பதும், பெண்கள் அவ்வாறில்லாது அழியக் கூடிய இன்பங்களை, உருக்கமும் நயமும் மிளிர தியாகம் செய்து, அதனால் கற்பினிற் றலைப் பிரிதலில்லாது அன்பில் திளைத்து வாழும் இரக்கவுணர்வால், துன்பத்தையும் துயரத்தையுங் கடந்து, மன்னி நிற்கும் அமைதியில் வீரங்காட்டி, என்றுமுளதாய ஆனந்த நிலையினையடைந்து, உயிரின் ஊதியத்தையும் இதனால் இசைமையும் எளிதில் அடைவர் என்ற உண்மையினையும் கம்பர் விளக்கமாக கதைப்போக்கில் அருளிச் செய்ததை உணர்ந்து ஏற்றவாறு கொள்க.

# பதிப்பாசிரியர் வ. உ. சி.

புலவர். க. சுப்பிரமணியன், பி. ஏ,

இந்நாள் பொன்னாள். கப்பலோட்டிய தமிழரின் நூற்றாண்டு விழா நாள். வ. உ. சி கப்பலோட்டியவர், தொழிலாளர் தலைவர். வழக்கறிஞர், சைவ சித்தாந்தச் செம்மல். சீர்திருத்த வாதி, விடுதலைப் போராட்ட வீரர், செக்கிழுத்த செம்மல், கல்லுடைத்த கர்ம வீரர், தமிழ்ப் பெரும் புலவர். அவர் தொல்காப்பியம் இளம்பூரணருரை, திருக்குறள் மணக்குடவருரை, இன்னிலை முதலியவற்றைப் பதிப்பித்த பதிப்பாசிரியராக விளங்குகிறார். வ. உ. சி. அவர்களின் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பு ஒன்றினை மேலோட்டமாகப் பார்த்தாலும் அவர் பதிப்பின் மதிப்பு நன்கு புலனாகும்

## பதிப்புரை பகர்வது:

நூலின் தொடக்கத்தில் வ. உ. சி. எழுதியுள்ள பதிப்புரை தொல்காப்பியரிடம் அவருக்குள்ள ஈடுபாட டையும் தமிழ்ப் பண் பாட்டுக் காதலையும் வெளிப் படுத்துகிறது. தமிழிலக்கணத்தின் தனித் தன்மையையும் நிறுவிக் காட்டுகிறது.

' ஆண், பெண், அலி இவை ஆண்பால், பெண்பால், ஒன் றன் பால் விகுதிகளால் உணர்த்துவது தமிழ் மொழி ஒன்றே. ஆண்பால் விகுதியைப் பொருந்தி ஆணைக் குறியாமலும், பெண்பால் விகுதியைப் பொருந்திப் பெண்ணைக் குறியாமலும் ஒன்றன்பால் விகுதியைப் பொருந்தி அலியைக் குறியாமலும் நிற்கும் சொற்கள் ஆரியம் முதலிய மொழிகளில் எண்ணில உண்டு. உயர்திணை, அஃறிணை என்னும் தமிழ் இலக்கணப் பாகுபாடு ஆரியம் முதலியவற்றில் இல்லை நிலத்தின் பாகு பாடுகளையும் அவற்றின் உரிப்பொருள், கருப் பொருள்களை யும், அவற்றின் மக்கள் ஒழுக்கங்களையும் கூறுவது தமிழிலக் கணம் ஒன்றே

இவ்வகைத் தனிச் சிறப்புப் பொருந்திய இத்தமிழ் இலக் கணத்துள்ளும் ஆரிய மொழிகள் சிலவற்றையும், ஆரியர் பழக்க வழக்கங்கள் சிலவற்றையும், ஆரியர் கொள்கைகள் சிலவற்றை யும் இந்நூலாசிரியர் நுழைத்திருத்தலை ஆங்காங்குக் காண லாம். ஆயினும், தமிழ் மக்களின் முற்காலப் பழக்க வழக்க ஒழுக்கங்களும் தமிழ் மொழியின் நேர்மையும் மாண்பும் ஏற்ற மும் இந்நூலின்கண் தெற்றெனக் காணலாகும். இந்நூலின்

எழுத்ததிகாரச் சொல்லதிகாரச் சூத்திரங்களைக் கற்போர் நன்னூல் ஆகியவற்றைப் புன்னூலாதியனவாகக் காண்பரென்பது திண்ணம். ''

இவ்வுரை கொண்டு நன்னூலுக்குத் தொல்காப்பியத்தை ஒத்த சிறப்பில்லை என்பதை நாமறிகிறோம். நன்னூல், நன்னூலா? எனக் கேள்விக் குறியெழுப்பிய 'பாவாணர்களு'க்செல்லாம் வ உ. சி அவர்களே முன்னோடி.

## பதிப்பு முறை :-

சூத்திரங்களின் எண்களையும். அவற்றிற்குரிய பக்கங்களையும் குறித்துக் காட்டும் சூத்திர அகராதி அனைவர் பதிப்பிலும் காணப்படும் ஒன்றாகும். வ உ. சி. பதிப்பில் காணப்படும் இயலகராதி புதுமையான ஒன்றாகும் எழுத்ததிகார ஒன்பது இயல்களின் தலைப்புக்களையும் அகர வரிசைப்படி எடுத்துக் காட்டி ஒவ்வொரு இயலுக்குமுரிய சூத்திரத் தொகை இத்தனை என்பதையும் அவ்வியல் தொடங்கும் பக்க எண்களையும் தெளிவாகக் குறித்துள்ளார்.

சூத்திர அகராதி நூலின் இறுதியில் இருப்பது நூலினை ஏற்கனவே கற்று இரண்டாம் முறை ஆராயப் புகுவோர்க்குச் சிறிது சலிப்பைத் தரும். வ. உ. சி. அவர்கள் பதிப்பில் சூத்திர அகராதி நூலின் தொடக்கத்தில் காணப்படுவது ஆராய்ச்சியாளருக்கு எளிதாக இருக்கிறது.

"கற்போர் எளிதில் உணருமாறு பொருட்டொர்பு நோக்கிச் சூத்திரச் சொற்களையும் அவற்றின் பொருட் சொற்களையும் பிரித்தும், நிறுத்திப் படித்தற்கேற்ற அடையாளங்களிட்டும் பதிப்பித்துள்ளேன்'' எனும் வ உ. சி. அவர்களின் பதிப்புரையால் அவர் பதிப்பு முறையை அறியலாம்.

## உரைச் சேர்க்கை :—

தாம் புதிதாக எழுதிச் சேர்த்துள்ள உரைகளை [ ] இக்குறிக்குள் அடக்கியுள்ளதாக வ உ. சி. யே கூறுகிறார். எனவே [ ] இக்குறிக்குள் காணப்படும் உரை முழுவதும் வ. உ. சி அவர்களின் உரை என்பதைத் தெளிவாக அறியலாம்.

இளம்பூரணர் மேற்கோளாகக் காட்டியுள்ள இலக்கியத் தொடர்களுக்குரிய நூற்பெயர்கள் இளம்பூரணருரையில்

இல்லை இலக்கிய இலக்கண ஆராய்ச்சியின் தொடக்க நிலையில் உள்ளவர்களுக்கு இச்சான்றுத் தொடர்களுக்கான பாடல்களை யும், நூல்களையும் தேடிக் காண்பது அரிதான செயலாகும். வ உ. சி. அவர்கள் சான்றுத் தொடர்களுக்குரிய பாடல் எண் களையும் நூற் பெயர்களையும் [ ] இக்குறியுள் எழுதியுள்ளார்.

**சூத்திர விளக்கம் :**

சூத்திரங்களில் காணப்படும் ஈற்றசைகள் எண்ணிடைச் சொற்கள் முதலியவை பற்றிய இலக்கணக் குறிப்புகள் இளம் பூரணர் உரையில் காணப்படாவிடினும் வ உ சி. உரையில் விளக்கமாகக் காணப்படுகிறது

அவைதாம்

இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன் என்கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே
(புணரியல்—17.)

"முதல் எட்டு ஏகாரமும் எண்ணிடைச் சொல் ஒன்பதாம் ஏகாரம் ஈற்றசை" என்பது வ. உ சி. அவர்களின் விளக்க மாகும்.

உரைத் தெளிவு :

இளம்பூரணருரையால் ஏற்படும் ஐயங்களை வ. உ. சி. அவர்களின் தெளிவுரை போக்குகிறது

வல்லெழுத்தென்ப கசட தபற (நூன் மரபு 19)
மெல் லெழுத்தென்ப ஙஞண நமன (நூன் மரபு 20)
இடையெழுத்தென்ப யரல வழள (நூன் மரபு 21)

"வல்லெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர் கசட தபற என்னும் தனி மெய்களை மெல்லெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர் ஙஞண நமன எண்ணும் தனி மெய்களை இடை யெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர் யரல வழள என்னும் தனிமெய்களை" என்பது இளம்பூரணர் உரையாகும்.

இப்பதினெட்டு எழுத்துக்களையும் தனிமெய்கள் என்று இளம் பூரணர் கூறினும் அவை உயிர் மெய்யெழுத்தின் வடிவிலேயே காணப்படுகின்றன. புள்ளிகள் இல்லை வ. உ. சி. அவர்களின் உரை மிகத் தெளிவாக அமைந்துள்ளது.

"கசடதபற என்னும் தனிமெய்கள் க்ச்ட்த்ப்ற்
நஞணநமன என்னும் தனிமெய்கள் ங்ஞ்ண்ந்ம்ன்
யரல வழள என்னும் தனிமெய்கள் ய்ர்ல்வ்ழ்ள்"

இத்தெளிவுரையே "மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல்" எனும் தொல்காப்பியர் இதயத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்ருது
(குற்றியலுகரப் புணரியல்—5)

"இது. குற்றியலிகரம் புணர்மொழியுள் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று" எனச் சூத்திரம் நுதலிய பொருளை முதலில் கூறிய இளம்பூரணரே இறுதியில் "இதனுனே, ஆகார ஈறு அகரம் (உயிர் மயங்கியல்—சூத்திரம் 24) பெற்ருற் போல ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் இகரம் பெற்று யகர முதல் மொழியோடு புணருமாறு கூறிற்ருயிற்று" என விளக்கவுரை ஆற்றுகிருர்.

வ உ. சி அவர்களின் உரையே சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் எனப்படும் அழகுடன் திகழ்கிறது.

"குற்றியலுகரம் குற்றியலிகரம் ஆம் இடம் உணர்த்துதல் நுதலிற்று என று கூறுதல் மிகப் பொருத்தம் உடைத்து" என்பது வ. உ. சி. அவர்களின் உரையாகும்.

பாட பேதம்:

அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்
(மொழி மரபு 23)

"அகரத்தின் பின்னர் இகரமேயன்றி யகரமாகிய புள்ளியும், ஐ எனப்பட்ட நெட்டெழுத்தாம். அவை வடிவு பெறத் தோன்றும்"

உதாரணம்: ஐவனம் அய்வனம் என வரும். "மெய் பெறத் தோன்றும் என்றதனன், (அகரத்தின் பின்னர் யகரமேயன்றி) வகரப் புள்ளியும் ஔகாரம் போல வருமெனக் கொள்க என்றவாறு" என்பது இளம்பூரணர் உரையாகும்.

ஔவை அவ்வை எனும் சான்றுகள் இளம்பூரணர் உரையில் இல்லை மேலும் அகர இகரம் ஐகாரமாகும் எனும் சூத்திரத்திற்கு ஐயர், அஇயர் என்பதைச் சான்று காட்டி அது கொள்ளற்க என்று இளம்பூரணர் குறித்தது போல் இங்குக் குறிப்பிடாமையால் அய்வனம், அவ்வை என்பவை கொள்ளற்பாலனவா? தள்ளற் பாலனவா? எனும் ஐயம் எழுகிறது. வ. உ. சி அவர்களின் பாட பேத ஆராய்ச்சியுரை ஐயம் நீக்குகிறது.

"இச் சூத்திரம்,

அகரத் திம்பர் யவகரப் புள்ளியும்
ஐஔ நெடுஞ்சினை மெய் பெறத் தோன்றும்

என்றிருத்தல் வேண்டும்

இதன் பொருள். அகரத்தின் பின்னர் யகர வொற்றும் வகர ஒற்றும் ஐகாரம் ஔகாரம் என்னும் நெட்டெழுத்தாம். (அவை) வடிவு பெறத் தோன்றும்.

உதாரணம்: ஐயவி, அய்யவி; ஔவை, அவ்வை. மெய் பெறத் தோன்றும் என்றதனால், அவற்றைக் கொள்க என்றவாறு" (தந்தை பெரியார் இவ்வாறு எழுதி வருவது தக்கதே) "காலப் பழைமையில் ஏடு பெயர்த்து எழுதினோர் "யவகரப் புள்ளி" என்பதனை 'யகரப் புள்ளி' எனவும் "ஐஔ நெடுஞ்சினை" என்பதனை ஐயென் நெடுஞ்சினை எனவும் பிழையாக எழுதினர் போலும். அப்பிழைப் பாடத்தைப் பிழையற்ற பாடமெனக் கருதி உரையாசிரியர் அதற்குத் தக்கவாறு உரையெழுதிச் சென்றனர் போலும்" என்பது வ. உ. சி அவர்களின் உரையாகும் நச்சினார்க்கினியர் உரையிலும் இச் சிறப்பான பாட பேதக் குறிப்பு இல்லை.

செய்யுளிறுதிப் போலு மொழி வயின்
னகார மகாரம் ஈர் ஒற்று ஆகும்
(மொழி மரபு 18)

இதன் பொருள்:— செய்யுள் இறுதிக் கண் போலும் என்னும் மொழிக் கண், னகாரமும் மகாரமும் வந்து ஈரொற்று உடனிலையாய் நிற்கும் [போலி எனவும் பாடம்]

உதாரணம்: ... .. பூத்தது போன்ம் எனவரும்

இச்சூத்திரத்தில் உள்ள 'போலும்' என்பதைப் போலி என்று கொண்டே இளம் பூரணரும் நச்சினார்க்கினியரும் உரை

எழுதி உள்ளனர். வ. உ. சி. பதிப்பில் மட்டுமே 'போலும்' என்பது காணப்படுகிறது. போலும் என்பதே உரைக்குப் பொருத்தமானதாகும். போலி என்பதைப் பாட பேதமாகவே வ உ. சி. கூறியுள்ளது மிகப் பொருத்தமானதாகும்.

அருஞ்சொற் பொருள் :

தேவையான இடங்களில் அருஞ்சொற் பொருள் கூறும் அகராதிப் பண்பும் வ. உ. சி உரையில் காணப்படுகிறது.

" ஈம் = இடுகாடு ; கம் = கம்மியரது தொழில்; உரும் = இடி "
(புள்ளி மயங்கியல் 33)

" நாகு = இளமரம் ; தெள்கு = ஒரு பூச்சி ; எஃகு = வேல் "
(குற்றியலுகரப் புணரியல்-1)

" அழன் = பிணம் "

கற்பார்க்குக் கருத்து எளிதில் விளங்க வேண்டிக் காற் புள்ளிகள். அரைப் புள்ளிகள், வளைவுக் குறிகள், சிறுகோடுகள் முதலியவற்றை அறிஞர் அண்ணா அவர்களின் 'தம்பிக்குக்' கட்டுரைகளில் நிறையக் காணலாம். சிலம்புச் செல்வர் ம. பொ. சி அவர்கள் தம் கருத்தினைப் பிறரைக் கொண்டு எழுதச் செய்யும் போதும் [ dictation ] இத்தகைய குறிகளை யும் கோடுகளையும் கூறுவர். பதிப்புக்குத் தெளிவும் பண்பு மிக இன்றியமையாதது என்பதை இத்தகைய சான்றோர்கள் வாயி லாக அறியும் நாம் வ. உ. சி பதிப்பினைச் சிறந்த பதிப்புக்கு முன்னோடியாகக் கொள்ளலாம்

வாழ்க பதிப்பாசிரியர் வ. உ. சி புகழ் !

---

**பொழிலன்பர்கள் சுவைக்க.**

" பிறமொழி நச்சுக் கலந்த எம்மொழியினரும்
முன்னேற்றமடைய முடியாது "

— பேராசிரியர் மார்லி.